**ஒருவரும் சேர கூடாத ஒளியில் வாசம் செய்கிற படைத்தவன் மீது நம்பிக்கை வைத்து இக்கட்டுரையை தொடங்குகிறேன்.**

# தலைப்பு : இன்றைய மருத்துவம் மற்றும் மருத்துவக்கல்வி முறை

## முன்னுரை:

உலகில் பல்வேறு மருத்துவங்கள் வளர்ந்து கொண்டு இருக்கின்றன. இருப்பினும் அவற்றினால் ஏற்படுகிற பக்க விளைவுகளையும், அதன் செலவுகளையும் கண்டு மக்கள் அஞ்சி நடுங்குகின்றனர். மேலும் மரபு வழி மருத்துவமே சிறந்த தீர்வு என்று உலக மருத்துவ அறிவியல்துறை சார்ந்த வல்லுனர்கள் கருத தொடங்கி உள்ளனர். அவர்கள் மட்டுமில்லாதது மக்களும் புரிய தொடங்கியுள்ளனர். பண்டைய கால தமிழர்கள் மருந்தையும், மருந்து பொருளையும் பயன்படுத்தி மக்களுக்கு ஏற்படுகின்ற நோயினை குணமாக்குவதில் வல்லவர்கள் என்பது சிந்து சமவெளி நாகரிகம் பற்றிய அகழாய்வு சான்றுகள் மூலம் தெரிய வருகிறது.

பண்டைய தமிழர்கள் அறுவை சிகிச்சை மருத்துவத்திற்கு செம்பை பயன்படுத்தினர். ஏனெனில், செம்பு கத்தி பயன்படுத்துவதன் மூலம் பக்கவிளைவு ஏற்படாது என்பது நம்மில் எத்தனை பேருக்கு தெரியும்.

## இன்றைய சூழ்நிலையில் மருத்துவக்கல்வி மற்றும் மருத்துவ முறைகள்:

தற்போதைய தமிழக அரசும் மற்றும் இந்தியாவின் பிற மாநில அரசுகளும் அயல்நாட்டு ஆங்கில மருத்துவ முறையினை மற்றும் அதன் கல்வி முறையினை பாடமாக செயல்படுத்தி கொண்டு இருக்கிறது. நவீன மருத்துவக்கல்வி முறை என்ற பெயரில் நம் இந்திய பாரம்பரிய மருத்துவ முறையை மக்களிடம் இருந்து மறக்கடித்துக் கொண்டு இருக்கின்றனர். இம்முறை நடை முறையில் இருந்தால் எதிர்கால சந்ததியினர் நம்முடைய பாரம்பரிய எளிய மருத்துவத்தினை மறந்து அயல் நாட்டு ஆங்கில மருத்துவ முறையை முழுமையாக சார்ந்து இருக்க வேண்டிய நிலை ஏற்படும்.

## இன்றைய மருத்துவக்கல்வி முறை:

- நம் நாட்டில் மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டுக்கு முன்னர் 387 ஆக இருந்த நிலையில் தற்போது 654 ஆக 69 சதவீதம் அதிகரித்துள்ளது என அரசாங்கம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது.

- மேலும் எம்பிபிஎஸ் இடங்களின் எண்ணிக்கை 94 சதவீதம் உயர்ந்து, 51,348ல் இருந்து 99,763 ஆகவும், முதுகலை (பிஜி) இடங்களின் எண்ணிக்கை 107 சதவீதம் அதிகரித்து, 2014க்கு முன் 31185 ஆக இருந்த நிலையில், தற்போது 64,559 ஆகவும் அதிகரித்துள்ளது. ராஜ்யசபாவில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் பாரதி பிரவின் பவார் கூறினார்.

- தமிழ்நாட்டில் உள்ள எம்பிபிஎஸ் கல்லூரிகளின் புள்ளி விவரங்கள்:
  தமிழ்நாட்டில் 5,225 இடங்களைக் கொண்ட 38 அரசு மருத்துவக் கல்லூரிகள் 5,500 இடங்களைக் கொண்ட 32 தனியார் மருத்துவக் கல்லூரிகள் (நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள் உட்பட) உள்ளன. (Source: India Today Feb8, 2023)

தமிழகத்தில் திருநெல்வேலி, சென்னை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் மட்டுமே அரசு பாரம்பரிய சித்த மருத்துவ கல்லூரிகள் உள்ளன. மேலும், ஒரு சில மாவட்டங்களில் மட்டுமே தனியார் சித்த மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகள் உள்ளன. இந்திய பாரம்பரிய சித்த மருத்துவ முறைகளை அடிப்படையாகக் கொண்டு கற்பிக்கும் கல்லூரிகளை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

இந்தியாவில் ஓர் ஆண்டிற்கு மட்டும் ஏறத்தாழ 45,698 மருத்துவக் கல்லூரி பட்டப்படிப்பு முடித்து வெளி வருகிறார்கள். அவர்களில் இந்திய பாரம்பரிய சித்த மருத்துவ முறை பயின்று பட்டம் பெற்றவர்கள் 4,000–க்கும் சொற்பமானவர்களே. மேலும் பாரம்பரிய சித்த மருத்துவத்தில் பட்டம் பெற்றவர்களுக்கு போதிய வேலை வாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குறியாக உள்ளது. இந்தியாவில் சித்தா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் இயற்கை வழி வாழ்வியில் முறை என ஒவ்வொரு மாநிலத்திற்கும் அந்தந்த மாநிலத்தின் மரபுவழிச் சார்ந்த பண்டைய காலத்தில் மருத்துவ முறைகள் இருந்தன. அவைகள் அனைத்துமே மக்களிடம் இருந்து மறக்கடிக்கப்பட்டிருக்கிறது என்பது மறக்கமுடியாத உண்மை. இன்றைய காலகட்டத்தில் பண்டைய காலத்து மருத்துவ முறைகளை மறந்து இந்தியா முழுவதும் அயல்நாட்டு ஆங்கில மருத்துவ முறைக்கு முக்கியத்துவம் தருவது ஏனோ ?

**அயல்நாட்டு மருத்துவ முறைகளை இப்படி பரப்பியது யார் ?**

ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டுக்குள் நம் நாடு சென்றதைத் தொடர்ந்து அவர்களின் உணவுப்பழக்கம், உடை தொடங்கி வழிப்பாடு மற்றும் மருத்துவம் என அவர்களின் வாழ்வியலை நம் மக்கள் மீது திணித்தனர். நம் சித்த மருத்துவத்தைப் பொறுத்தவரை 'உணவே மருந்து மருந்தே உணவு' என்பதினை சரியாக புரிந்து கொள்ளாத நம் மக்கள் சித்த மருத்துவத்தின் வழி முறையான பத்தியம் இருப்பதையும், அதனால் கால தாமதமாவதையும் துச்சமாக எண்ணி, உணவு கட்டுப்பாடு போன்றவற்றினை கடைப்பிடிக்க வேண்டும் என்ற காரணங்களுக்காக உடனடி நிவாரணம் தரக்கூடிய ஆங்கில மருத்துவத்தை பெரிதும் நாடிச்சென்றனர். மேலும் அயல் நாட்டு கலாச்சாரம் மற்றும் மருத்துவ முறையே சிறந்தது என்ற மாயமான நம்பிக்கை நம் மக்களிடம் நிலவியது மூலகாரணம். பிற்காலத்தில் நவீன மருத்துவ முறை என்ற பெயரில் திரைப்பட பிரபலங்களை பயன்படுத்தி அயல் மருத்துவதினை திணித்து உங்கள் tooth paste –ல் உப்பு இருக்கா என்று தொடங்கி கருத்தரிப்பு நிலையம் வரை வியாபார நோக்கத்துடன் பாரம்பரிய மருத்துவ முறைகளை மறக்கச் செய்து அலோபதி என்று அழைக்கப்படுகின்ற ஆங்கில மருத்துவ முறையே சிறந்தது என கார்ப்ரேட் நிறுவனங்கள் நம்மை திசை திருப்பியதே தவிர வேறு எவரும் இல்லை.

**அரசு என்ன செய்யலாம்:**

இன்றைய மக்களும், இளைஞர்களும் இயற்கை வாழ்வியிலை நோக்கி நகர்ந்து கொண்டு இருக்கின்றனர். எனவே இயற்கை சார்ந்த பாரம்பரிய மருத்துவ முறைகளான : **தமிழ் மருத்துவ முறையான சித்த மருத்துவம் மற்றும் அதன் நிழலான மூலிகை மருத்துவம், நாட்டுவைத்தியம் போன்றவற்றிக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் நம்முடைய பழமையான மருத்துவ முறைக்கு புத்துயிர் கொடுக்க முடியும்.** மேலும் இம்முறையினை செயல்படுத்துவதன் மூலம் மக்களுக்கு வரும் நோயினை அறுவை சிகிச்சையின்றி எளிய முறையில் குணப்படுத்த முடியும்.

இம்முறை மருத்துவம் அதிக செலவுகளை உள்அடக்கியது அல்ல. இதன் மூலம் மருத்துவத் துறைக்கு செலவழிக்கும் நிதியினை அரசு மிச்சப்படுத்தலாம். இன்று பிற மாநிலங்களை ஒப்பீடும் போது தமிழக அரசு மருத்துவத் துறைக்கும் மற்றும் மருத்துவப் படிப்புக்கும் அதிக நிதியினை ஒதுக்குகிறது. ஆனால் அது பாரம்பரிய சித்த மருத்துவ முறையையும் மற்றும் சித்த மருத்துவப்படிப்பையும் மக்களிடம் கொண்டு சேர்க்க செலவழிக்கப்படுகிறதா என்றால் அது கேள்விக்குறியாகவே உள்ளது.

தமிழகத்தில் மாவட்டங்கள் தோறும் ஆங்கில வழி நவீன மருத்துவமனைகளும் (Allopathy) மற்றும் மருத்துவக் கல்லூரிகளும் அதிகமாக உள்ளன. ஆனால், அரசு சித்த மருத்துவமனைகளும், அரசு சித்த மருத்துவக் கல்லூரிகளும் மிகவும் சொற்ப இலக்கங்களில் மட்டுமே உள்ளன. எனினும், தற்போதைய தமிழக அரசு தேர்தல் வாக்குறுதியினை நிறைவேற்றும் விதமாக திருவள்ளூர் மாவட்டம் மாதவரத்தில் சித்த மருத்துவப் பல்கலைகழகம் உருவாக்குவதற்கான கட்டுமான பணிகளை தொடங்கியுள்ளது. இது மிகவும் பாரட்டுக்குரியது வரவேற்கத்தக்கது, இதன் மூலம் வருங்காலத்தில் படித்த சித்த மருத்துவர்கள் உருவாக அதிக வாய்ப்புள்ளது. மேலும், பள்ளிக் கல்வினை முடித்து கல்லூரியில் சேரும் மாணவ, மாணவியர்களுக்கு விருப்பமான தேர்வாக சித்த மருத்துவம் அமையும் என்பது மாற்று கருத்தில்லை. எளிய சித்த மருத்துவத்தினை கல்வியின் மூலமாக அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்ல நிச்சயமாக வழிவகுக்கும்.

**அரசு ஏன் செய்ய வேண்டும்:**

இன்று கல்வியறிவு பெற்ற மக்கள் பக்கவிளைவு இல்லாத சித்த மருத்துவத்தின் நன்மையை அறிந்து கொண்டு சித்த மருத்துவத்தினை நாடத் தொடங்கியுள்ளனர். மேலும் தங்களுடைய இருப்பிடத்ததுக்கு ஏற்ப வீட்டுத்தோட்டம், மாடித்தோட்டம், பண்ணைத் தோட்டம் போன்றவற்றை அமைத்து மூலிகைகளை வளர்த்து அதன் நன்மையினை பெறுகின்றனர். **ஆனால் கல்வி அறிவில்லாத பாமர ஏழை, எளிய மக்களுக்கு எளிய சித்த மருத்துவமுறையின் நன்மைகள் இன்னும் சென்று அடையவில்லை.** சித்த மருத்துவத்திற்கும் அதன் கல்வி முறைக்கும் அதிக நிதியினை ஒதுக்கி மாவட்டங்கள் தோறும் ஆங்கில மருத்துவமனைகள் (அலோபதி) மற்றும் மருத்துவக் கல்லூரிகள் இருப்பது போல அதற்கு இணையாக சித்த மருத்துவத்தினையும் அதன் கல்வி முறையும் விரிவாக்கம் செய்து மக்களிடம் கொண்டு சேர்க்க அரசு முன்வர வேண்டும். இதன் மூலம் மக்களுக்கு சிறந்த மருத்துவத்தினை தருவதோடு மட்டும் இல்லாமல், மக்களுக்கும் அரசின் மீது நல்ல மதிப்பும், மரியாதையும் உண்டாகும்.

**பழமையான மருத்துவமுறை எப்படி கொண்டு சேர்ப்பது:**

கல்லூரி படிப்பில் சேரும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் தமிழ் மருத்துவ கல்வி என்ற ஓர் கட்டாய (Allied subjectஆக) பாடத்திட்டத்தினை உருவாக்குவதன் மூலம் எதிர்காலத்திற்கு நம்முடைய தமிழ் மருத்துவ முறையை அழியாமல் கொண்டு செல்லாம். மேலும், மறக்கடிக்கப்பட்ட நம்முடைய பாரம்பரிய எளிய சித்த மருத்துவ முறையே சிறந்தது என்ற உண்மை தன்மையினை அறிய செய்யலாம். அது மட்டுமல்லாமல் சித்த மருத்துவத்தின் மூல காரணியான இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தினையும், எதிர்கால சந்ததியினர் மனதில் விதைக்கலாம்.

**நம்முடையவர்கள் எங்கே:**

நம் முன்னோர்கள் விட்டு சென்ற பாரம்பரிய மருத்துவ முறைகளை you tube போன்ற சமூக வலைதளங்களில் பலர் பதிவுவேற்றி, அதனின் நன்மையினை மக்களுக்கு நினைவூட்டி கொண்டு இருக்கின்றனர். மேலும் தொலைக்காட்சிகளிலும் பிரபல சித்த மருத்துவர்களை வைத்து நோய்க்கான தீர்வினை செய்முறையாக ஒளிப்பரப்புகின்றனர். இந்தியாவில் சமூக வலைதளங்களில் அதிகமாக தேடப்பட்டவை எளிய மருத்துவமுறையான பாரம்பரிய மருத்துவ முறைகள் என்று கண்டறியப்பட்டுள்ளது. இதன் மூலம் மக்களும் அதனை நாடத் தொடங்கியுள்ளனர் என்பது தெளிவாகிறது.

**சித்த மருத்துவமனையில் வழங்கப்படும் மருத்துகளின் அவலநிலை**

- அரசு சித்த மருத்துவமனையில் வழங்கப்படும் மருத்துகள் பொடிகளாக ஆண்டுகள் பல கடந்தும் இன்றும் கூட பழைய காகித தாள்களில் (old newspaper) பொந்து மட்டுமே தரப்படுக்கின்றன. அதாவது கடைவீதிகளில் விற்கப்படும் எண்ணெய் பலகாரங்களான வடை, பஜ்ஜி போன்றிவனை வழங்குவது போல காகித தாள்களில் பொந்து வழங்குகின்றனர். மனிதனின் நோயினை குணமாக்கக் கூடிய நம்முடைய எளிய தமிழ் மருத்துகளின்அவல நிலையினை நினைத்துப் பாருங்கள்.

**ஓர் சிறிய ஆய்வு**



ஆண்டுகள் பல கடந்தும் மக்களிடம் போதிய விழிப்புணர்வு பெறாத தமிழ் சித்த மருத்துவக்கடைகளின் இன்றைய நிலை.



அரசாங்கத்தாலும், மக்களாலும் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில மருத்துவக்கடை இன்றைய நிலை.

- மேலே காண்கின்ற படத்தில் ஆங்கில மருத்துவத்திற்கும், சித்த மருத்துவத்திற்கும் ஓர் சிறிய ஒப்பீடு.

- ஒரு சித்த மருத்துவக் கடையில் ஆய்வு செய்த போது கடையின் உரிமையாளர் கூறினார். நான்கு தலைமுறையாக தமிழ் சித்த மருந்துக்கடை நடத்தி வருகிறோம். தற்போதைய சூழ்நிலையில் நமது ஊரில் மட்டும் 15–க்கும் மேற்பட்ட ஆங்கில மருந்துக்கடைகள் உள்ளன. வீதிக்கு ஒரு கோவில் இருப்பது போல் இன்று வீதிக்கு ஒரு ஆங்கில மருத்துக்கடைகள் ஆக்கிரமித்து உள்ளன. ஆனால் என்னுடைய சிறு வயது தொடங்கி இன்று வரை தமிழ் மருந்துக்கடைகள் வெறும் மூன்று மட்டுமே இயங்கி வருகிறது. இந்த தமிழ் மருந்துக்கடையில் போதிய வருமானம் வருவதில்லை. ஆனாலும் தமிழ் மருத்துவத்தின் மீது உள்ள பற்றுதலால் இக்கடையினை நடத்தி வருகிறோம். குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் நாங்கள் பக்கவிளைவு இல்லாத மருத்துகளை கொடுத்து மக்களுக்கு சேவை செய்து கொண்டு இருக்கிறோம். எல்லா நோய்களையும், குணமாக்கக்கூடிய மருந்துகளும், மூலிகைகளும் நம்முடைய சித்த மருத்துவதில் உள்ளன. ஆனால் சித்த மருத்துவத்தின் மீதும், சித்த மருத்துவக்கல்வியின் மீதும் அதிக அக்கறை அரசு செலுத்துவதுமில்லை, இந்த எளிய மருத்துவத்தினை மக்களிடம் கொண்டு சேர்க்கவுமில்லை. இதனால் மக்களிடம் போதிய விழிப்பணர்வு இல்லாததால் மக்கள் அயல்நாட்டு (Allopathy) ஆங்கில மருத்துவத்தினை நாடி செல்லுகின்றனர் என்று தன்னுடைய ஆதங்கத்தையும், உண்மை நிலையையும் எடுத்து உரைத்தார்.

- ✓ பிரபல சித்த மருத்துவர் ஓர் காணொளியில் கூறினார், கொரோனா பேரிடர் காலத்தின் தொடக்கத்தில் தமிழக அரசு சித்த மருத்துவத்தின் மீது கவனம் செலுத்தியதன் மூலம் சித்த மருத்துவ முறையை பயன்படுத்தி எளிய மூலிகைகளை கொண்டு மிக விரைவாக நோயினை கட்டுபடுத்தி குணப்படுத்திணோம். ஆனால் இரண்டாம் அலையில் யாருடைய அழுத்தத்தின் பெயரிலோ சித்த மருத்துவத்தின் மீதுள்ள கவனத்தினை அரசு விளக்கி கொண்டது. அதன் தொடர்ச்சியாக கொரோனா தொற்று தாக்கம் நான்காம் அலை வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது என்றார்.

**அமெரிக்காவில் சித்த மருத்துவம்**

முதன்முறையாக அமெரிக்க மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவம் அறிமுகமாகிறது. தமிழர் மருத்துவமான சித்த மருத்துவத்தின் மகத்துவத்தை அறிவியல் ஆய்வுப்பூர்வமாக ஓர் அங்கீகாரம் பெற குறிப்பாக அமெரிக்கத் தமிழர்கள் விரும்புகின்றனர். ஒருங்கிணைந்த மருத்துவ மாமேதை செ.நெ. தெய்வநாயகம் அவர்களால் தொடங்கப்பட்ட இந்திய நலவாழ்வு நல்லறம் (Health India Foundation) என்கிற தொண்டு அமைப்பு நீண்ட காலமாக ஒருங்கிணைந்த மருத்துவத்தில் ஆய்வு செய்து வருகிறது. அந்நிறுவனத்தின் முன்னெடுப்பில் அமெரிக்காவின் அட்லாண்டா நகரில் உள்ள புகழ் பெற்ற மோர்வுஸ் மருத்துவக் கல்லூரி (Morehouse School of Medicine, Altana, USA) தமிழர்களின் மருத்துவமாகிய சித்த மருத்துவத்தினை ஒரு பாடமாக அங்கீகரித்துள்ளது. அமெரிக்க மருத்துவ வரலாற்றிலேயே முதன்முறையாக மருத்துவம் பயிலும் மாணவர்கள் சித்த மருத்துவம் கற்றுக்கொள்ள ஒரு வாய்ப்பு இதனால் ஏற்பட்டுள்ளது. இதில் இந்திய நலவாழ்வு நல்லறமும் கர்நாடகத்தில் உள்ள மணிபால் பல்கலைக்கழகமும் இணைந்து இந்த பாடத்திட்டத்தை உருவாக்கி அதற்குண்டான

அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. இதன் காரணமாக முதல் கட்டமாக மேல் குறிப்பிட்ட மருத்துவக் கல்லூரியின் மருத்துவ மாணவர்களும் பேராசியரும் ஒருவரின் மேற்பார்வையில் தமிழகம் வந்து இந்த பாடத்திட்டத்தை பயின்று வருகிறார். அதன் நிறைவு நிகழ்ச்சி சமீபத்தில் சென்னையில் நடைபெற்றது. சித்த மருத்துவம் உலகளாவிய மருத்துவமாக மலர வேண்டும். நம்முடைய மருத்துவத்தினை கண்டம் விட்டு கண்டம் எடுத்து செல்கின்றனர். அது நல்ல முயற்சியாக இருந்தாலும் **பண்டம் மாற்றும் முறைபோல நம்முடைய சித்த மருத்துவத்தினை அவர்கள் எடுத்துச் சென்று அவர்களின் மருத்துவ முறையான அலோபதியினை நம்மிடம் முழுமையாக திணித்து தான் வேதனையாக உள்ளது.** நாம் இதனை உணர்ந்து நம்முடைய பாரம்பரிய மருத்துவ கல்வி முறைக்கும், மருத்துவத்திற்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்பது காலத்தின் கட்டாயமாகும் (Source: Health & Beauty Tamil monthly magazine Nov.2022).

**முடிவுரை**

தற்போதைய காலத்தில் தொழில்நுட்பம் சார்ந்த நவீன மருத்துவமுறைகள் தேவையான ஒன்று தான். அதற்காக நம்முடைய முன்னோர்கள் வகுத்த பாரம்பரிய மருத்துவமுறையை மறப்பது சரியானது அல்ல. **ஆங்கில மருத்துவ முறைக்கு சமமாக சித்த மருத்துவத்துக்கும், அதன் கல்வி முறைக்கும் அரசு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கம்.** இந்திய மருத்துவ முறைகளில் தொண்மையான மருத்துவ முறையாக இருந்து கொண்டிருப்பது சித்த மருத்துவம் என்பது தெளிவு. அதனை அழிய விடாமல் அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்க வேண்டியது நம்முடைய தலையாய கடமை. நம்முடைய நாட்டில் நம் முன்னோர்கள் வகுத்த மருத்துவத்திற்கும் அதன் மருத்துவக்கல்வி முறைக்கும் முக்கியத்துவம் இல்லாமல் இருப்பது, வேதனைக்குரியது. பக்கவிளைவு ஏற்படாமல் உடலை கீறாமல், இரத்தம் வடிக்காமல், ஊசியின் மூலம் மருந்தை செலுத்தாமல் உடலில் ஏற்படுகின்ற நோயினை குணப்படுத்த முடியும் என்றால் அது நம் முன்னோர்களால் அறியப்பட்ட சித்த மருத்துவம் போன்ற நம்முடைய பாரம்ரிய மருத்துவ முறைகளே அல்லாமல் வேறு இல்லை.

**வாழ்க தமிழ், துளிர்த்து உயரட்டும் தமிழ் மருத்துவம்!**

**உங்களுடைய புரிதலுக்கு நன்றிகள் பல.**

நெல்லை மு. செல்வா
வாழ்த்துவது என்றாலும் தூற்றுவது என்றாலும் அனுகவும்
jselvaa1701@gmail.com
**9500256450**